DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **S.T.C.No.13/2019**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.1
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | பாண்டிமீனாள் |
| Father/ Husband Name | : | செல்லையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of
**22.07.2022**

**முதல்விசாரணை**

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் வாழ்கிற மாணிக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். கூலி வேலைக்கு செல்கிறேன். விபத்தில் இறந்த பன்னீர்செல்வம் என்னுடைய மகன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு காலை 10.00 மணிக்கு தேவகோட்டைக்கு தனது இரு சக்கவர வாகனத்தில் அவர் நண்பர் பாண்டியுடன் சென்று கொண்டு இருந்த போது சந்தை ரோடு அருகே எதிரே வந்த டிராக்டர் என் மகன் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டேன்.

நான் எனது மகன் காயம்பட்டதை கேள்விப்பட்டு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு இறந்து விட்டதாக சொன்னார்கள். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1).**

-

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகாரை போலீசார் எழுதினார்கள்,அதில் நான் கையெழுத்து

செய்தேன் என்றால் சரிதான். எனது மகன் இறந்தது சம்பந்தமாக பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.